ஸ்ரீ :



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



திருக்கச்சி நம்பிகள் 1000ஆவது அவதார உற்சவம்

மாசி-ம்ருகசீர்ஷம் - 05-03-2009

## திருநக்ஷத்திரதனியன்

கும்பே$_4$ ம்ருக$_3$ஸிரோத்$_3$ பூ$_4$தம் யாமுநார்ய பத$_3$ாஸ்ரிதம் |
தே$_3$வராஜ த$_3$யாபாத்ரம் ஸ்ரீகாஞ்சீபூர்ணமாஸ்ரயே ||

## நித்யதனியன்

தே$_3$வராஜ த$_3$யாபாத்ரம் ஸ்ரீகாஞ்சீபூர்ண முத்தமம் |
ராமாநுஜமுநேர் மாந்யம் வந்தே$_3$ஹம் ஸஜ்ஜநாஸ்ரயம் ||

# ஆறுவார்த்தை

(கச்சி வரதர் திருகச்சி நம்பியின்மூலம் எம்பெருமானாருக்கு அருளியவை)

## முன்னுரை

(புதுவை கோ.கிருபாநிதி இராமாநுஜதாஸர்)

"ஒருவனே தேவன்" என்பது வேதவாக்கு. கடவுள் ஒருவன் தான் என்பதை ஆத்திகர்கள் அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் அந்தக் கடவுள் யார்? தன்மைகள் யாவை? என்பதில் ஒத்த கருத்தில்லை.

"பரம்பொருள்" ஒன்றே என்று சொல்லி தன் மதத்தில் உறுதியாயிருப்பதால்தான் இஸ்லாமியமும் கிறிஸ்துவமும் இன்று அசைக்க முடியாதபடி வலிமைபெற்று வருகின்றன. ஒன்று என்று சொல்லிக் கொண்டு ஒரு முஸ்ஸிம் சர்ச்சுக்குபோய் வழிபடுவதோ அல்லது கிறித்துவர் பள்ளிவாசலுக்குப் போவதோ இல்லை. ஆனால் 'இந்து' க்களாகிற நாம் தான் பரிதாபத்துக்குரிய நிலையில் இருக்கின்றோம்.

"சிவனே பரம்பொருள்" என்றும், "இல்லை இல்லை சக்தி தான் பரம்பொருள். சக்தியில்லையேல் சிவன் இல்லை" என்றும், "சிவனுக்கே பிரணவத்தை உபதேசித்த தகப்பன் சாமியான முருகன் தான் பரம்பொருள்" என்றும், பிரணவத்தையே முகமாகக்கொண்ட விநாயகர் தான் பரம்பொருள்" என்றும் சர்ச்சை முடிவில்லாது தொடர்ந்து வருகிறது. நடுவே புகுந்து, "எல்லா தெய்வமும் ஒன்று" என்று குரங்கு மத்யுஸ்தம் செய்கிறார்கள் சிலர். இதன்விளைவால் இக்கால இளைஞர்கள் நாஸ்திகர்களாக உருவாக முடியுமே தவிர மதநம்பிக்கையுள்ள ஆத்திகர்களாக ஆகமுடியாது. நம்முடைய "எம்மதமும் சம்மதம்" என்ற கொள்கை கேரளத்திலுள்ள ஐயப்பனோடு நில்லாமல் நாகூருக்கும், வேளாங்கண்ணிக்கும் போய் வருவதை பெருமையாகக்

கூறிக்கொள்ளச் செய்கிறது. இது எத்தகைய அபத்தம் என்பதை பெரும்பாலோர் அறிவதில்லை.

இந்தப் 'பரந்த' மனத்தினால் நம்முடைய ஆன்மாவையே நாளடைவில் நாம் இழந்து வருகிறோம் என்பதையும் பெரும்பாலோர் அறிவதில்லை. மதவிஷயத்தில் இன்று நம் மக்களின் நிலை வழி தெரியாதவனே வழிகாட்டும் நிலையில் உள்ளது. இத்தகையவர்களுக்கு நேரான பாதை அமைத்த இராமாநுசர் நமக்கு நல்ல வழிகாட்டியாக உள்ளார் என்பதை அறிய இச்சிறு நூல் உதவும்.

கீதைக்கு எத்தகைய முக்கியத்துவம் கொடுக்கிறோமோ—அதே தகுதியை இந்நூலுக்கும் கொடுக்கலாம். இதுவும் கண்ணனின் அர்ச்சாவதாரமாகிய வரதராஜனின் வாக்கு. கீதையில் பதினெட்டு அத்தியாயங்களில் விரிவாகச் சொல்லியும் பரதத்துவத்தை உணரமுடியாத நிலையில் நம்நாடு உள்ளது. அதனால் வரதராஜப்பெருமாள் பளிச்சென்று ஒரே வார்த்தையில் "நாமே பரதத்துவம்" என்று சொல்லியுள்ளார். காஞ்சி வரதராஜர் தன் பெருங்கருணையினால் தன்னைத்தானே வெளிப்படுத்திக்கொள்ள இந்த ஆறு வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறார். இவற்றை வரதன் ஆன்மாக்களின் நிலையைக் கண்டு பதறிச் சொல்லிய வார்த்தைகளாகவே கருதுகிறேன்.

இந்த ஆறு வார்த்தைகளின் கருத்தை மிக எளிய நடையில் நம் ஸீதர்சனர் ஸ்வாமி நூலாக்கி அளித்துள்ளார். அதை அனைவரும் படித்து உய்வோமாக.

## அவதாரிகை

(ஸ்ரீ உ.வே.S.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி அட்வகேட்,
ஸ்ரீவைஷ்ணவஸுதர்சனம் ஆசிரியர்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி – 620 017)

ஸ்ரீகாஞ்சியில் எழுந்தருளியிருக்கும் வரதராஜப்பெருமாள் தமக்குத் திருவாலவட்ட கைங்கர்யம் செய்துவந்தவரும், அக்கைங்கர்யம் செய்யும்போது தம்மோடு பேசும் பெருமைபெற்றவருமான திருக்கச்சி நம்பியின்மூலம் எம்பெருமானாருக்கு ஆறு வார்த்தைகளை அருளிச் செய்தார் என்பது நம் ஸம்ப்ரதாயத்தில் நெடுங்காலமாக வழங்கி வரும் வரலாறு. எம்பெருமானார் காலத்தில் அத்வைதமதம் மிகப் பரவியிருந்தது. நாயன்மார்களாலே சைவமதமும் ப்ரசாரம் பெற்றிருந்தது. அனாதி வைதிகமதமான விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவமதத்தை ப்ரஹ்மஸூத்ரம், பகவத்கீதை, உபநிஷத்துக்கள் என்னும் ப்ரஸ்த₂ான த்ரயத்துக்கு விளக்கங்கள் எழுதி நிலைநாட்ட வேண்டும் என்னும் நியமனத்தை ஆளவந்தார் தமது சிஷ்யர்கள் மூலம் ஸ்ரீராமாநுஜருக்குத் தெரிவித்துவிட்டுப் பரமபதம் அடைந்து விட்டார். ஸ்ரீராமாநுஜர் யாதவப்ரகாசர் என்னும் அத்வைதியிடம் சிஷ்யராயிருந்து உபநிஷத்துக்கள் முதலானவற்றுக்கு அர்த்தம் கேட்கும்போது அவர் கூறும் பொருள்கள் பொருந்தாதவை என உணர்ந்து பலமுறை அவரோடு வாதப்ரதிவாதங்கள் நிகழ்ந்து, அவர் சொல்லும் பொருள்கள் தமக்கு ஏற்காமையாலே அவரைவிட்டு விலகிவிட்டார். அப்படி விலகிய பின்பே ஸ்ரீராமாநுஜர் ஆளவந்தாரைக் காண ஸ்ரீரங்கத்துக்குச் சென்று, அவர் பரமபதித்து விட்டபடியால் அவருடைய திருமேனியை ஸேவித்து, அவரது விருப்பத்தை சிஷ்யர்கள்மூலம் உணர்ந்து, அவ்விருப்பங்களை நிறைவேற்றுவதாக ப்ரதிஜ்ஞை செய்துவிட்டுக் காஞ்சிக்குத் திரும்பினார். ஆழ்வார்களும் நாதமுனியும், ஆளவந்தாரும் உகந்த விசிஷ்டாத்வைத

ஸ்ரீவைஷ்ணவ மதமே வேதசாஸ்திரங்களுக்கு ஒட்டியிருப்பது என்று ஸ்ரீராமாநுஜர் உணர்ந்திருந்தபோதிலும், அக்காலத்தில் அந்த மதத்துக்கு மாறுபட்ட பல கருத்துக்கள் இந்நாட்டில் பரவியிருந்தன. அந்த மாறுபட்ட கருத்துக்களையுடைவர்கள் தங்கள் கருத்துக்களை வேதசாஸ்திரங்களுக்கு ஒட்டியவை என்று கூறி வந்தார்கள். அவர்கள் கூற்று தவறு என்பதையும், ஆழ்வார்கள் கண்ட மதமே வைதிகமதமென்பதையும் உறுதியாக உணர்ந்திருந்தபோதிலும் தம்முடைய நிர்ணயங்கள் எம்பெருமான் உகந்தவையா என்று நேரே அறிய விரும்பினார் ஸ்ரீராமாநுஜர். அப்போது திருக்கச்சிநம்பி ஸ்ரீகாஞ்சியில் வரதராஜப்பெருமாளோடு பேசிக்கொண்டிருப்பவராகப் பிரஸித்தி பெற்றிருந்தார். ஸ்ரீராமாநுஜர் அவரிடம் சென்று "தர்சன விஷயமாக அடியேன் சில நினைவுகள் கொண்டிருக்கிறேன். அவை விஷயமாகப் பெருமாளுடைய நிர்ணயத்தை தேவரீர் கேட்டறிந்து சொல்ல வேணடும்" என்று பிரார்த்தித்தார். அவர் அப்படியே பெருமாளைக் கேட்டு பெருமாள் அருளிச்செய்த ஆறு வார்த்தைகளை எம்பெருமானுருக்கு அருளிச்செய்ய, அவை தமது நிர்ணயங்களோடு ஒத்திருந்ததைக் கண்டு ஆழ்வார்கள் கண்ட மதமே பரமவைதிகமதம் என்று உறுதிபூண்டு ஆளவந்தாரின் விருப்பங்களை நிறைவேற்ற முற்பட்டார் எம்பெருமானார் என்பது பல நூல்களில் காணப்படும் சரித்திரமாகும். இந்த ஆறு வார்த்தைகளைச் சுருக்கமாக இனி விளக்குவோம்.

**"ஆறுவார்த்தை" விளக்கவுரை**

**(ஸ்ரீ உ.வே.S.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி அட்வகேட், ஸ்ரீவைஷ்ணவஸுதர்சனம் ஆசிரியர், 3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி - 620 017)**

(1) **திருமாலான நாமே பரம்பொருள் (அஹமேவ தத்வம்)**

எம்பெருமானார் காலத்தில் சிலர் சிவனைப் பரம்பொருளாகக் கூறிவந்தனர். "பிரமன், விஷ்ணு, சிவன் என்னும் மும்மூர்த்திகளும் ஒன்றே" என்னும் த்ரிமூர்த்தி ஐக்கிய வாதத்தையும் "மும்மூர்த்திகளும் சமானமானவர்களே. இவர்களுக்குள் ஏற்றத்தாழ்வுகள் இல்லை" என்னும் த்ரிமூர்த்தி ஸாம்யவாதத்தையும், மும்மூர்த்திகளைக் காட்டிலும் மேற்பட்ட ஒன்றே பரம்பொருள்" என்னும் உத்தீர்ணவாதத்தையும் சிலர் கூறிவந்தனர். இக்கூற்றுக்கள் எல்லாம் தவறு. திருமாலெனப்படும் நாராயணனான நாமே பிரமன் உருத்திரன் முதலான எல்லாத் தெய்வங்களுக்கும் காரணமான பரம்பொருள்" என்று தேவப்பெருமாள் இவ்வார்த்தையாலே உறுதிப்படுத்தியருளினார்.

(2) **ஜக$_3$த்$_3$ப்$_3$ரஹ்மபே$_4$த$_4$மே த$_3$ர்சனம்**

அக்காலத்தில் உலகுக்கும் ப்ரஹ்மத்துக்குமிடையேயுள்ள தொடர்புபற்றி வைதிர்களிடையே பல குழப்பங்களிருந்தன. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது - "உலகமும் ப்ரஹ்மமும் வெவ்வேறு" என்று சொல்லும் பேதச்ருதிகள் எனப்படும் வேத வாக்யங்களும் "அவை ஒன்றே" என்று சொல்லும் அபேதச்ருதிகள் எனப்படும் வேதவாக்யங்களும் முரண்படுகையால் இந்தக் குழப்பம் தோன்றியது. இந்தக் குழப்பத்தால் யாதவப்பரகாசர் என்னும் மதப் ப்ரவர்த்தகர் "ப்ரஹ்மமே சேதனாசேதனரூபமான உலகமாகப் பரிணமிக்கிறது"

என்னும் கொள்கையைப் பரப்பியிருந்தார். குற்றங்களுக்கெல்லாம் கொள்கலமான அசேதனமாக ப்ரஹ்மம் பரிணமிக்கிறது என்னும் கொள்கையை அக்காலத்திலேயே பலர் ஆதரிக்கவில்லை. ஆயினும் சேதனர்கள் ஜ்ஞானஸ்வரூபர்களாயிருக்கையாலே அவர்களுக்கும் ப்ரஹ்ம்த்துக்கும் ஸ்வரூப ஐக்யத்தை அபேதச்ருதிகள் கூறுவதாகக் கொண்டார்கள் சிலர். "ப்ரஹ்மத்தை மாயை மறைக்கையாலே சேதனாசேதனர்களடங்கிய உலகமாகிற பொய்த்தோற்றம் உண்டாகிறது. இதையே பேதச்ருதிகள் கூறுகின்றன. உண்மையில் ஒரு பேதமுமற்ற அறிவாகிற ப்ரஹ்மம் ஒன்றே உள்ள பொருள்" என்னும் கொள்கையை ஆதிசங்கரர் பரப்பியிருந்தார். அறிவான ஒரே பரம்பொருள் சரீரங்களாகிற (உபாதி$_4$யெனப்படும்) காரணத்தாலே பல ஜீவர்களாகத் தோற்றமளிக்கிறது என்னும் கொள்கையைப் பரப்பியிருந்தார் பாஸ்கரர். இவர்கள் மூவரும் பேதச்ருதிகளுக்கும் அபேதச்ருதிகளுக்கும் மேலெழத் தோன்றும் முரண்பாட்டைப் போக்கும் க$_4$டகச்ருதிகளைக் காணாததே இவர்கள் குழப்பத்துக்குக் காரணமென்று உணர்ந்திருந்தார் ஸ்ரீராமாநுஜர். "உலகத்தை சரீரமாகவும், ப்ரஹ்மத்தை அதற்கு அந்தர்யாமியான ஆத்மாவாகவும் கூறும் இந்த கடகச்ருதிகள். "இவ்வண்ணம் உலகம் ப்ரஹ்மத்தைவிட்டுப் பிரித்துக் காணமுடியாதாபடி அதற்குச் சரீரமாயிருக்கையாலேயே உண்மையில் வெவ்வேறான ஜகத்ப்ரஹ்மங்களை அபேதச்ருதிகள் ஒன்றாகக் கூறுகின்றன' என்று காட்டியிருக்கையாலே, பேதச்ருதிகளையும் அபேதச்ருதிகளையும் ஒற்றுமைப்படுத்தும் வாக்யங்களாகின்றன. அதனாலேயே அவை கடகச்ருதிகள் எனப்படுகின்றன" என்பது ஸ்ரீராமாநுஜரின் நிர்ணயம். இவ்விஷயத்திலும் எம்பெருமானுடைய திருவுள்ளத்தை அறியவிரும்பியிருந்தார் ஸ்ரீராமாநுஜர். "ஜகத் ப்ரஹ்மபேதமே தர்சனம்" என்று அறிவுறுத்துவதன் மூலம் ஜகத் ப்ரஹ்மங்களுக்கு அபேதத்தைக்கூறும் சங்கர பாஸ்கர யாதவப்ரகாச மதங்கள் தவறானவை

என்றும். அவற்றுக்கு பேதத்தை அடிப்படையாகக் கொண்டு சரீராத்மபாவத்தாலே அபேதச்ருதிகளை நிர்வகிக்கும் ஶ்ரீராமாநுஜரின் நிர்ணயமே தாமுகந்தது என்றும் காட்டியருளினார் வரதராஜப்பெருமாள்.

(3)**கைக்கொள்ளத்தக்க மோக்ஷோபாயம் ப்ரபத்தியே**

வேதசாஸ்திரங்களில் பற்பல மோக்ஷோபாயமங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் பக்தி, ப்ரபத்திகள் முக்கியமாகக் காணப்படுகின்றன. இவையிரண்டுக்குள்ளும் - பற்பல வித்யைகளாகப் பிரிந்து நிற்கும் பக்தியே உபநிஷத்துக்களில் மிகுதியாக மோக்ஷஸாதனமாகக் கூறப்படுகிறது. இதைப் பாரிப்பவர்களுக்கு பக்தியே முக்கியமான மோசக்ஷஸாதனம் என்னும் எண்ணம் ஏற்படக்கூடும். ஆனால் ஆழ்வார்களும், ஆளவந்தார் முதலான ஆசார்யர்களும் தங்களிடம் மற்ற உபாயங்களில்லை என்றும், மற்ற உபாயங்களை அடியோடு கைவிட்டு, எம்பெருமனையே உபாயமாகப் பற்றியிருக்கும் ப்ரபந்நர்களே தாங்கள் என்றும், தங்களுடைய க்ரந்த்ங்களில் முழங்கியிருக்கிறார்கள். உபநிஷத்துக்களில் சொல்லியபடி பக்தியை உபாயமாகக் கைக்கொள்வதா? ஆழ்வார், ஆசார்யர்கள் ஶ்ரீஸூக்திகள் அநுஷ்டானங்களின்படி ப்ரபத்தியைக் கைக்கொள்வதா? என்னும் குழப்பம் அக்காலத்தில் பலருக்கு இருந்தது. "உலகில் ப்ரவ்ருத்திபரர்கள் மிக்கிருக்கையாலே ப்ரவ்ருத்திரூபமான பக்தி முதலான உபாயங்களை மிகுதியாக விதித்த வேதபுருஷன் 'முமுக்ஷுர்வை ஸரணமஹம் ப்ரபத்₃யே [மோக்ஷமடைய விரும்பிய நான் (பரமபுருஷனை) சரணமடைகிறேன்] என்று சரணாகதியையே ஸ்வாநுஷ்டானமாகக் காட்டினான். ஆகையால் அதையே ஆழ்வார்களும், ஆசார்யர்களும் கைக்கொள்ளத்தத்க உபாயமாகக் கொண்டிருந்தனர்" என்று உணர்ந்திருந்தார் ஶ்ரீராமாநுஜர். இவ்விஷயத்திலும், எம்பெருமானுடைய திருவுள்ளத்தை அறியவிரும்பினார். அதிலும் எம்பெருமானுடைய நிர்ணயமே

தாமுகந்தது என்பதை இந்த மூன்றாவது வார்த்தையின் மூலம் காட்டியருளினார் காஞ்சீ வரதராஜப் பெருமாள்.

### (4)ப்ரபந்நனுக்கு அந்திமஸ்ம்ருதி தேவையில்லை

வேதாந்தங்களிலும், கீதை முதலான சாஸ்திரங்களிலும் ஸாத$_4$ன பக்தி நிஷ்டர்களுக்கு மோக்ஷமடைவதற்கு அந்திமஸ்ம்ருதி அவச்யம் வேண்டும் என்று காணப்படுகிறது. ப்ரபந்நனுக்கு இந்த அந்திமஸ்ம்ருதி வேண்டுமா? அல்லது தேவையில்லையோ? என்னும் விசாரமும் அக்காலத்தில் இருந்தது. "ப்ரவ்ருத்திபரர்களுக்காக ஏற்பட்ட பக்தி முதலானவற்றில் தாம் முயன்று சாதிக்கவேண்டிய அந்திமஸ்ருதி வேண்டுமாயினும் தன் முயற்சியினின்றும் நீங்கி, சாதகம்போல் நாதன் தனதருளே பார்த்திருக்கும் ப்ரபந்நனுக்கு இந்த நிர்ப்பந்தம் தேவையில்லை. இதனாலேயே வராஹப்பெருமாள் தனது சரமச்லோகத்தில் "சரீரம் நன்றாயிருக்கும் போது என்னை உபாயமாக நினைத்தவனை சரீரம் கட்டைபோல் கிடக்கும் மரண தசையில் நான் நினைக்கிறேன்" என்றருளிச் செய்தார். பெரியாழ்வாரும் தமது திருமொழியொன்றில் "அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளியானே" என்று அருளினார். ஆகையால் ப்ரபந்நனுக்கு அந்திமஸ்ம்ருதி தேவையில்லை" என்று முடிவு கட்டியிருந்தார் ஸ்ரீராமாநுஜர். இதிலும் பெருமாளுடைய நிர்ணயத்தை அறிய விரும்பினார். இதையும் தேவராஜப்பெருமாள் தமது நாலாவது வார்த்தையின்மூலம் தாமுந்ததென்று உறுதிப்படுத்தினார்.

### (5)ப்ரபந்நனுக்கு இந்த சரீரத்தின் முடிவில் மோக்ஷம்

"ஸாதனபக்தி நிஷ்டனுடைய ப்ராரப்த கர்மம் எந்த ஜன்மத்தில் முடிகிறதோ அப்போதே அவனுக்கு மோக்ஷம். அதுவரை அவன்

பிறவியெடுத்தே தீரவேண்டும்” என்று வேதசாஸ்திரங்கள் கூறுகின்றன. ப்ரபன்னனுக்கும் இந்த நியமமுண்டோ? என்னும் ஐயம் அக்காலத்தில் பலருக்கு இருந்தது. “ப்ரபத்தியைச் சொல்லும் சாஸ்த்ரங்கள் ப்ரபந்நனுக்கு அந்த ஜன்மத்தின் முடிவிலேயே மோக்ஷம் ஏற்படும் என்று கூறுகையாலும். ‘சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்’ என்று நம்மாழ்வாரும் அருளிச்செய்திருக்கையாலும், தன் முயற்சியினின்றும் நீங்கி அவனருளையே உபாயமாகப் பற்றியிருக்கும் இவனைப் பெறுவதில் எம்பெருமான் மிகவும் துடிப்புடனிருக்கையாலே இவனுக்கு மேலும் பிறவிகளை அளிக்கமாட்டானாகையாலும் சரணாகதநுக்கு இந்த ஜன்ம முடிவிலேயே மோக்ஷம்” என்று உணர்ந்திருந்தார் எம்பெருமானார். இவ்விஷயத்திலும் எம்பெருமானுடைய அங்கீகாரத்தை அறியவிரும்பினார். இந்த ஐந்தாவது வார்த்தையின் மூலம் தமது அங்கீகாரத்தைபளித்தருளினார் ஸ்ரீவரதராஜப் பெருமாள்.

(6)பெரிய நம்பியை ஆச்ரயிப்பீர்

ஆளவந்தாருக்குப் பல சிஷ்யர்கள் உண்டு. அவர்களில் (1)திருக்கோட்டியூர்நம்பி (2) பெரியநம்பி, (3) திருமாலையாண்டான், (4)பெரியதிருமலைநம்பி (5) திருவரங்கப்பெருமாளைரையர் ஆகிய ஐவர் முக்கியமானவர்கள் இவர்களில் யாரை ஆச்ரயித்து த்$_2$வயோபதேசம் பெற்று முக்கியாசார்யராகக் கொள்வது என்னும் ஐயம் ஏற்படக்கூடும். ஆளவந்தார் தம்மை அழைத்து வரச்சொல்லிப் பெரியநம்பியையே அனுப்பி அவரைக்கொண்டு தம்மைப் பரிபூர்ணமாகக் கடாக்ஷிக்கச் செய்கையாலே அவரையே முக்கியாசார்யராகக் கொள்வது தக்கது என்று உணர்ந்திருந்தார் ஸ்ரீராமாநுஜர். இந்த ஆறாவது வார்த்தையாலே உடையவர் நினைவே தன் நினைவுமாகும் என்று காட்டியருளினார் ஸ்ரீதேவராஜப்பெருமாள்.

பெருமாளின் அங்கீகாரத்தை அறிந்து ஆறாவது வார்த்தையின்படி பெரியநம்பியை ஆச்ரயித்து, முதல் இரண்டு வார்த்தைகளை ஸ்ரீபாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்தஸாரம், கீதாபாஷ்யம், வேதார்த்தஸங்க்ரஹம் என்னும் ஐந்து நூல்களாலும், பின்மூன்று வார்த்தைகளை மூன்று கத்யங்களாலும் நிலைநாட்டி, இந்த வார்த்தைகளை அருளிய எம்பெருமானுக்குத் திருவாராதனம் செய்யும் க்ரமத்தை விளக்கும் நித்யக்ரந்தத்தையும் அருளிச்செய்து, பரமவைதிக தர்சனத்தை நிலைநாட்டியருளினார் எம்பெருமானார்.

## தேவராஜாஷ்டகம்

**(திருகச்சி நம்பிகள் அருளிச்செய்தது)**

ஸ்ரீமத்காஞ்சீமுநிம் வந்தே$_3$ கமலாபதிநந்த$_3$நம் |
வரத$_3$ாங்க்ரிஸதாஸங்க ரஸாயநபராயணம் ||

தே$_3$வராஜத$_3$ யாபாத்ரம் ஸ்ரீகாஞ்சீபூணமுத்தமம் |
ராமாநுஜமுநேர் மாந்யம் வந்தே$_3$ऽஹம் ஸஜ்ஜநாஸ்ரயம் ||

1. நமஸ்தே ஹஸ்திஸைலேஸ ஸ்ரீமந் ! அம்பு$_3$ ஜலோசந |
   ஸரணம் த்வாம் ப்ரபந்நோஸ்மி ப்ரணதார்த்திஹராச்யுத ||
2. ஸமஸ்தப்ராணி ஸந்த்ராணப்ரவீண ! கருணோல்ப$_3$ண |
   விலஸந்து கடாக்ஷாஸ் தே மய்யஸ்மிந் ஜக$_3$தாம்பதே ||
3. நிந்தி$_3$ தாசாரகரணம் நிவ்ருத்தம் க்ருத்யகர்மண: |
   பாபீயாம்ஸம் அமர்யாத$_3$ம் பாஹிமாம் வரத$_3$ப்ரபே$_4$ா ||
4. ஸம்ஸாரமருகாந்தாரே து$_3$ர்வ்யாதி வ்யாக் $_4$ ரபீ$_4$ஷணே |
   விஷயக்ஷூத்$_3$ரகு$_3$ல்மாட்$_4$யே த்ருஷாபாத$_3$ பஸாலிநி ||

5. புத்ரதாரக்ருஹ க்ஷேத்ர ம்ரு$_3$கத்ருஷ்ணாம்பு$_3$ புஷ்கலே |
க்ருத்யாக்ருத்ய விவேகாந்த$_4$ம் பரிப்$_4$ராந்தமிதஸ்தத: ||

6. அஜஸ்ரம் ஜாதத்ருஷ்ணார்த்தம் அவஸந்நாங்க$_3$மக்ஷமம் |
க்ஷீணஸக்திப$_3$ லாரோக் $_4$யம் கேவலம் க்லேஸஸம்ஸ்ரயம் ||

7. ஸந்தப்தம் விவதை$_4$ர்து$_3$க்கை$_3$ து$_3$ர்வசைரேவமாதி$_3$ பி$_4$ |
தே$_3$வராஜ ! த$_3$யாஸிந்தோ ! தே$_3$வதே$_3$வ ! ஜகத்பதே ! ||

8. த்வதீ$_3$க்ஷண ஸுத$_4$ாஸிந்து$_4$ வீசிவிக்ஷேபஸீகரை: |
காருண்யமாருதாநீதை: ஸீதலைரபி$_4$ஷிஞ்ச மாம் ||

## வாழித்திருநாமம்

மருவாருந் திருமல்லி வாழ வந்தோன் வாழியே
மாசிமிருகசீரிடத்தில் வந்துதித்தான் வாழியே
அருளாளருடன் மொழிசொல் லதிசயித்தோன் வாழியே
ஆறுமொழி பூதூரரர்க் களித்த பிரான் வாழியே
திருவாலவட்டம் செய்து சேவிப்போன் வாழியே
தேவராசாட்டகத்தைச் செப்புமவன் வாழியே
தெருளாரு மாளவந்தார் திருவடியோன் வாழியே
திருக்கச்சி நம்பி யிருதிருவடிகள் வாழியே

**ஸ்ரீமதே ரம்ய ஜாமாத்ரு முநீந்த் $_3$ராய மஹாத்மநே |**
**ஸ்ரீரங்க$_3$வாஸிநே பூ$_4$யாத் நித்யஸ்ரீர் நித்யமங்க$_3$ளம் ||**
**மங்க$_3$ளாஸாஸன பரை: மத$_3$ாசார்ய புரோக$_3$மை: |**
**ஸர்வைஶ்ச பூர்வை ராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்க$_3$ளம் ||**